நல்லூர் ... யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 4 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 23 [06 - 3 - 1993] சனிக்கிழமை ஓசை 16

## புலமைப் பரிசில் முடிவு வெளியிடுவதில் தடங்கல்

1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்த போதும் அவற்றினை பாடசாலைகளுக்கு விநியோகிக்க முடியாமல் உள்ளதாக தெரியவருகின்றது. மேற்படி பெறுபேறுகளிற்கான வெட்டுப்புள்ளி பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படாமையே இதற்கான காரணமாகும். கடந்தமுறை வெளியாகிய 1992 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவிற்கான வெட்டுப்புள்ளி பரீட்சைத் திணைக்களத்தினால் 136 என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி [4 ஆம் பக்கம் பார்க்க]

( பூநகரி பாதை விவகாரம் )

# ஐ. நா. அதிகாரி யாழ். வருகின்றார்

# நாளை புலிகளுடன் பேச்சு

[யாழ்ப்பாணம்]

பூநகரி பாதை விவகாரம் தொடர்பாக மேலும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதி இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார். இவர் இப் பாதை விவகாரம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் நாளை பேச்சுவார்த்தை நடத்துவார்.

பூநகரிப்பாதை விவகாரம் தொடர்பாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவென அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயக் கொழும்பு பிரதிநிதி பீற்றர் நிக்கலஸ் விமானம் மூலம் நேற்று பலாலி விமானத்தளத்திற்கு வந்துள்ளார். இவர் இன்று காலை காங்கேசன்துறை முகத்தில் இருந்து பருத்தித்துறை வந்தடைந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்துசேருவார் எனத் தெரியவருகிறது.

இவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த மறுதினம் அதாவது நாளை பூநகரிப்பாதை விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

கடந்த மாதம் 11 ஆம் திகதி அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய பிரதிநிதி பூநகரி பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்தை நடத்திவிட்டு கொழும்பு திரும்பியிருந்தார்.

அப் பேச்சுக்களின் போது மக்கள் சுதந்திரமாக பயணம் செய்ய பூநகரி இராணுவத்தினர் வீதியைவிட்டுசற்று விலகி நிற்க வேண்டும் என புலிகள் கோரியிருந்தனர். அதே வேளை, பூநகரிப்பாதை திறக்கப்படாத நிலையில் கிளாலி கடற்பரப்பின் மீது சிறிலங்கா அரசு விதித்துள்ள தடையை நீக்குமாறும் கோரியிருந்தனர்.

புலிகளின் இந்த நிலைப் பாட்டுடன் கொழும்பு சென்ற [4 ஆம் பக்கம் பார்க்க]

## கிராம சேவையாளர் பதவி; அருத்தமாதம் நியமனம்

[யாழ்ப்பாணம்]

கிராமசேவையாளர் நேர்முகப் பரீட்சையில் புள்ளி ஒழுங்கின்படி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அடுத்தமாத முற்பகுதியில் வட-கிழக்கு மாகாண சபையினால் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்படுமென நேர்முகப் பரீட்சை நடத்திய மாகாணசபை உள்துறை அமைச்சின் பிரதான கணக்காளர் திரு. வி. நடராஜா நேற்றுத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உள்ள வெற்றிடங்களுக்கு புள்ளி ஒழுங்கின்படி தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு அந்தந்தப் பகுதியிலேயே நியமனம் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்களுக்கு பிறிதொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார். இப் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்றுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. [05]

## கப்பலில் செல்லவுள்ள நோயாளர் கவனத்திற்கு

கப்பல் மூலம் கொழும்பு செல்லவுள்ள நோயாளர்கள் தமது பெயர்களை யாழ். போதனா வைத்திய சாலையில் பதிவு செய்து கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளர் தாமே நேரடியாக வைத்தியரின் அத்தாட்சிக் கடிதத்துடன் சமுகமளிக்க வேண்டும் எனவும் பணிப்பாளர் கேட்டுள்ளார். எதிர்வரும் 15-ம் திகதிக்குப்பின் இந் நோயாளர்கள் கப்பல் மூலம் கொழும்பு செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசிரியர் விழா முற்பணம் இம்மாதம் கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கும் பாடசாலையில் கடமைபுரியும் அசிரியர்கள் சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்குப் பொறுப்பான நிதி உதவியாளர்களுக்கு அறி

தளபதி கிட்டு வந்த கப்பலின்

# கப்டனுக்காக ஆஜராக அமெரிக்க வழக்கறிஞர்

[கொழும்பு]

புலிகளின் மூத்த தளபதி ... சந்திரனின் தாயார் சென்னைக்கு அழைத்துவந்துள்ளார் ... ந்த ஒன்பது கப்பல் ஊழியர்களை கடலில் குதிக்கச் செய்த

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின்

## அனைத்துலக மகளிர்தின போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதை, சிறுகதை, ஓவியம் ஆகிய துறை சார்ந்த போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

கவிதை:-

ஃ முதலாம் இடம்:- ம. பிரவீனன் மகாஜனாக் கல்லூரி.

ஃ இரண்டாம் இடம்:- ஆதிலட்சுமி சிவகுமார்- காங்கேசன்துறைவீதி, இணுவில்.

ஃ மூன்றாம் இடம்:- வே. யோகீஸ்வரன்- 912, மாவடி வீதி, யாழ்ப்பாணம்.

ஃ பாராட்டுக்குரியவர்கள்:- முருகுரத்தினம் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி, மிர்ணாளினி ஜீவேச்வரா- சுழிபுரம் மத்தி, சுழிபுரம்

சிறுகதை:-

ஃ முதலாம் இடம்:- க. சிவராஜா- விழிசிட்டி, தெல்லிப்பழை.

ஃ இரண்டாம் இடம்:- ந. கண்ணன்- ராஜி வீதி- உடுப்பிட்டி.

ஃ மூன்றாம் இடம்:- கு. பிரியதர்சினி, செஞ்சோலை மகளிர் பாடசாலை.

ஃ பாராட்டுக்குரியவர்கள்:- வேணிசின்னத்தம்பி- வினோத் வீதி, மட்டுவில் வடக்கு செ. பொ. சிவனேசு- சசிகுமார் வீதி, கோண்டாவில் மேற்கு.

ஓவியம்-:

கீழ்ப்பிரிவு:-

ஃ முதலாம் இடம்:- சரன் சோபனா ஜேசுதாசன்- யாழ்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கெயர் நிறுவன பிரதிநிதி இன்று யாழ் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

கெயர் நிறுவன பிரதிநிதி இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

கெயர் நிறுவனத்தின் கொழும்பு தலைமையக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி லோறா ஓனன் பேக்என்பவரே இன்று வருகிறார்.

கெயர் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை நிர்வாகம் தொடர்பான விடயங்களை இவர் நேரில் பார்வையிடவுள்ளார் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிகளையும் இவர் சந்திக்கவுள்ளார்.. அத்துடன் மேற்படி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நடாத்தும் தொழில் சார் பயிற்சி நெறிகள் நடைபெறும் இடங்களையும் நேரில் பார்வையிடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகளுக்குவந்த டீசல் காங்கேசனில் தடுப்பு

கெயர்நிறுவனம் யாழ். விவசாயிகளுக்குகென கப்பல் மூலம் அனுப்பி வைத்த உரவகைகள் மற்றும் டீசல் என்பன கடந்த 5 மாதங்களாக காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட மியூறியேற் ஒவ்பொட்டாஷ் மற்றும் 5 பரல் டீசல் ஆகியனவே தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

## நிவாரணம் வழங்குவதில்

## ... கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கும் பாடசாலையில் கடமைபுரியும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் இம்மாதச் சம்பளத்துடன் விழா முற்பணம் ரூபா ஆயிரத்து ஐந்நூறு வழங்கப்பட உள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு இப்பணத்தை வழங்குவதற்கான அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்குப் பொறுப்பான நிதி உதவியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் பயிலுநர் ஆசிரியர்களாக உள்ளோர்களுக்கு கடந்த வருடம் மேற்கொண்ட நடைமுறையே இவ்வருடமும் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (17)

## ஊக்குவிப்பு கொடுப்பனவு; உடன்விபரம் அனுப்புக

11-06-90 இல் இருந்து 31-12-90 வரைக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தேவையான நிதியை வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து யாழ். கல்வித் திணைக்களம் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு கோட்டக்கல்வி அலுவலகங்களும் தத்தம் கோட்டங்களுக்குத் தேவையான ஒதுக்கீட்டு விபரங்களை 15-3-93க்கு முன்பாக யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் முன்னர் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு போன்றே இக்காலப் பகுதிக்குரிய கொடுப்பனவை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஆசிரியர்களும் தத்தமதுவரவைஉறுதிப்படுத்தும் வரவுச் சான்றிதழ்களை பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி தாம் சார்ந்த கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அதிபர் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## 5மில்லியன் ரூபா காப்புறுதி வழங்கப்படுவதில் தாமதம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். மாவட்ட கிளை கடந்த ஏழுமாத காலத்தில் முதிர்வடைந்த 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட காப்புறுதிகளை வழங்காது காலதாமதம் செய்து வருவ... தெரியவருகிறது.

... இக்கிளையில் ... செய்து கொண்ட ... ஏமாற்றம் ...ளனர். இது ...கொழும்பு தலை...த்துடன் தொட... போதிலும் பதி...டைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளை அலுவலக ஊழியர்களுக்கு இவ்வருட ஆரம்பத்திலிருந்து சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் வெளிக்கள உத்தியோகஸ்த்தர்களுக்கு கடந்த ஏழு மாதகாலமாக கொமிஷன் பணம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1991 ஆம் ஆண்டில் யாழ். காப்புறுதிக் கிளையேஇலங்கை முழுவதிலும் காப்புறுதித் தொகையில் இரண்டாவது இடத்தைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

[கொழும்பு]

புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு பயணம் செய்த கப்பல் கப்டனான ஜெயச்சந்திரன் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக அமெரிக்க வழக்கறிஞர் ஒருவர் இந்தியா சென்றுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த திரு. ஜான்சிசியாமகால் என்ற இந்த வழக்கறிஞரை ஜெயச்சந்திரனின் தாயார் சென்னைக்கு அழைத்துவந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

கடந்த ஜனவரியில் சமாதானத் திட்டத்துடன் வந்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு வந்த கப்பல் இந்திய கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டுசென்னைக்குகொண்டு செல்லப்பட்டபோது அதிலிருந்த ஒன்பது கப்பல் ஊழியர்களை கடலில் குதிக்கச் செய்த பின் அதிலிருந்த கிட்டு உட்பட பத்து போராளிகள் வீரச்சாவு அடைந்தது தெரிந்ததே.

இக்கப்பல் ஊழியர்கள் தற்போது தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ் கொலை வழக்கு முதலாம் எதிரியாக நளினி

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக தற்பொழுது விசேட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் முதலாவது எதிரியாக நளினி இடம்பெற்றுள்ளார். இவருடன் மொத்தம் 26 பேர் மீது வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலைவழக்கு தற்போழுது இருவேறு வழக்குகளாகப் பிரிக்கப்பட்டு விசாரிக்கப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், பொட்டு அம்மான், அகிலா ஆகியோர் மீது தனியானதொரு வழக்கும், கைது செய்யப்பட்டு பூந்தமல்லி சிறையில் வைக்கப்பட்டுள்ள 26 பேர் மீது தனியொரு வழக்கும் விசேட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தனு,சிவராசன், சுபா உட்பட இறந்தவர்கள் வழக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட புலனாய்வுத்துறையினர் ஏற்கனவே விசேட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் மேற்படி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், பொட்டு அம்மான், அகிலா, ஆகியோர் மீதான வழக்கு பின்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்புநிதி சேகரிப்பு

நல்லூர்மங்கயர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியுமென தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## திகிரிவெட்டை பகுதியில் கைது செய்யப்பட்டோர்

[மட்டுநகர்]

மட்டுநகர் திகிரி வெட்டை பகுதிகளை கடந்த 27 ஆம் திகதி சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 7 பொது மக்களின் பெயர் விபரங்கள் வருமாறு;

சந்திவெளியைச் சேர்ந்தவர்களான ஐயாத்துரை அற்புதன் [வயது 30], செம்பாப் போடி சரவணமுத்து [ வயது 29 ], கிட்ணபிள்ளை மயில்வாகனம் [வயது 18], சாமித்தம்பி சீனித்தம்பி [வயது 35], அழகையா யோகலிங்கம் [வயது 30], சீனித்தம்பி ராமன் [வயது 26] மற்றும் கல்கிசை வடமுனையைச் சேர்ந்த வைரமுத்துராஜா [வயது 26] ஆகியோரது பெயர்விபரங்களே கிடைத்துள்ளன.

இச் சம்பவத்தின் போது திகிரிவெட்டைப் பகுதியில் வேலுப்பிள்ளை, கந்தையா, சுப்பிரமணியம், கணபதி, ஐயாத்துரை, பவுல் ஆகியோரது வீடுகளைத் தீக்கிரையாக்கியுள்ளனர்.

## நிவாரணம் வழங்குவதில் புதிய நடைமுறை

யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியில் நேற்று நடந்தஉதவி அரசாங்க அதிபர்களுக்கான கூட்டத்தில் வலிவடக்கில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கல் தொடர்பான பிரச்சினைக்கு புதிய நடைமுறையொன்று முன் வைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியை சேர்ந்த உதவி அரசாங்கஅதிபர்கள்கொடுத்த இடம் பெயர்ந்துள்ளோர்பிரதேசம் தொடர்பான விளக்கத்தை அடுத்தே சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அப்பிரதேசத்தில் இருந்து முற்றாக இடம்பெயர்ந்தோருக்கு நான்கு கட்ட நிவாரணமும் இடை இடையே இடம்பெயர்வோருக்கு இரண்டு கட்ட நிவாரமும் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிவாரணம்தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையால் தமக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என கோரி சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்பாக தொடர்ச்சியாக மறியல் போராட்டம் நடாத்தப்பட்டுவந்தமைதெரிந்ததே.(சி)

## ஆசிரியர் இடமாற்றம் அபிவிருத்திசபை ஆட்சேபம்

புங்குடுதீவுமகாவித்தியாலய விஞ்ஞான கணித பயிற்சி ஆசிரியர் ந. கலைநாதன் கெற்பலி பாடசாலைக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளருக்கு மகஜர்ஒன்றை அனுப்பி வைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மாவட்டத்தில் 'புக்காரா' தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் முதல் முறையாக புக்காரா குண்டு வீச்சு விமானத்திலிருந்து காடுகளை நோக்கி குண்டுகள் ஏவப்பட்டன.

கடந்த 27 ஆம் திகதி வவுனியாவிற்குமேற்கே புலவனாலூருக்கும் குருக்களூருக்குமிடையே உள்ள காடுகள், வயல்களை நோக்கி இக் குண்டு வீச்சு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவன் பகுதியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் நேற்று இரவு கடுமையான துப்பாக்கி பிரயோகமும் அதனைத் தொடர்ந்து எறிகணைதாக்குதலும் இடம்பெற்றுள்ளன.

நேற்று இரவு 7.30 மணி தொடக்கம் 7.45 மணிவரை தொடர்ச்சியாக இத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பெற முடியவில்லை. இந்த துப்பாக்கி பிரயோகத்தை தொடர்ந்து மக்கள்குடிமனை நோக்கி எறிகணை தாக்குதல் நடைபெற்றதாக தெரியவருகின்றன. (நி)

நல்லூர்

# வரி விளம்பரம்

## ஒலிவ் ஸ்நானப்பவுடர்

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம். சீயசகாய், வெந்தயம், பயறு, எலுமிச்சங்கோது, அரைப்புஇயற்கைமூலிகைகள் கொண்டுதயாரித்தது, ஒலிவ் ஸ்நானப்பவுடர்.பாவித்துச் சுகம் காணுங்கள். அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகின்றது. ''மில்வைற்'' (சி/6125)

## கரிசலாங்கண்ணி மூலிகை

பல்திறன் கொண்டது கரிசலாங்கண்ணி மூலிகை.பால்மா வெற்றுப்பக்கற் 10 நேரில் சேர்ப்பித்து ஒருநாற்றங்கால் பெற்றுக் கொள்ளுங்கள்.மில்க்வைற் (சி/6133)

## நிர்வாகிகள் தெரிவு

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க யாழ் உபபணிமனையின் வருடாந்தப் பொதுக் கூட்டம்கடந்த 19- 2- 93இல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற போது கீழ்க்கண்டோர் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. றொபேட், உபதலைவர்: திரு மு. நாகராசா, செயலாளர்: திரு. க. சந்திரலிங்கம், உபசெயலாளர்: திரு. ம. சண்முகதாஸ், பொருளாளர்: திரு. சி. சிவலிங்கம் மற்றும் பதினெட்டு வலயப் பிரதிநிதிகளும்தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்கள்: திரு. அ. அல்பேட், திரு. ம. வஸ்தியாம்பிள்ளை, திரு. சு. இராசேந்திரம். (21)

## அராலியூரரின் நாடகங்கள்

யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குத் தமிழில் முதன் முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும் ஒரேயொரு மாணவனான,200 வானொலி நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை30,- (4398)

## வகுப்புகள்

தமிழ் ரைப்பிங் வார நாள், வார இறுதி வகுப்புகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன SCHOOL OF BUSINESS ADMI ISTRATION16,3rd CROSS STREET JAFFNA (சி 6145)

## அமெரிக்கன்"ஓர்பிஸ்" கொழும்பு வருகை

(கொழும்பு)

இருபது கண் மருத்துவ நிபுணர்களுடன் அமெரிக்கன் 'ஓர்பிஸ்' என்ற விமானம் கொழும்பு வந்துள்ளது.

பறக்கும் கண் மருத்துவ நிலையம் என்று அழைக்கப்படும் இந்த விமானம் மார்ச் 28 ஆம் திகதி வரை கொழும்பில் தரித்து நின்று இலவச கண் சிகிச்சை செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

'அமெரிக்கன் ஓர் பிஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமானம் டி சி 8 ரகத்தைச் சேர்ந்தது. கண் அறுவைச் சிகிச்சைக்கான முழுமையான வசதிகளும் இந்த விமானத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்
1973 | 06 | 14

வீரச்சாவு
1991 | 03 | 06

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

ஒப்பந்த அடிப்படையில் முழுநேர உபவிடுதித் தலைவர் பதவிக்கான (ஆணும், பெண்ணும்) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1993-03-31ம் தேதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 4000/- ரூபா மாதமொன்றுக்கு(நிலையானது) (அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள அதிகரிப்புடன்)

**தகைமைகள்:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி. விடுதிகளை நிர்வகிப்பதிலும் முகாமை செய்வதிலும்,அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:** நாற்பது ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.

**குறிப்பு:** பரீட்சை ஒன்றின் மூலமும் நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலமும் தெரிவு நடைபெறும்.

வெற்றிபெறும் விண்ணப்பதாரி நியமிக்கப்படும்,கிளிநொச்சியில்/மருதனார் மடத்தில்/யாழ்ப்பாணத்தில் உள்ள வதிவு மண்டபத்தில் வசித்தல் வேண்டும்.ஆனால் அவரின் குடும்பத்துடன் வதிவு மண்டபத்தில் வசிக்க முடியாது. வெற்றிபெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும். பிணை வைப்பாக ரூபா 10,000/- செலுத்துதல் வேண்டும்.இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் 10 தவணைகளில் கழிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூபா 20/- வீதம் நிதிக்கிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின்சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.அஞ்சல் மூலம் படிவங்களையும், இதரவிபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரிற்கு ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/ தபால் கட்டளை

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளில் மாணவர் அனுமதி-1992

1. 1990 ஆகஸ்ட் / 1991 ஏப்ரல் (விசேட) ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த, (உயர்தர) பரீட்சைகளில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளிடமிருந்து இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும்.

2. அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகள்

இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு மாணவர் ஒருவர் அனுமதி பெறுவதற்கு தகைமையுடையவராக இருக்கவேண்டுமாயின்,

(I) (அ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு பாடங்களிற் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களிற் சித்தி பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நான்காவது பாடத்தில் 25% புள்ளிக்குக் குறையாமலும் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(II) நான்கு பாடங்களிலும் மொத்தத் திரட்டு 180 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்றிருத்தல் வேண்டும்.

மூன்று தடைவைக்கு மேல் க. பொ. த. (உயர்தர) பரீட்சையை எடுத்திருந்தால் அவர் அனுமதிக்குத் தகைமையற்றவராவார்.

3. பல்கலைக்கழகம், பல்கலைக்கழகக் கல்லூரி (என். டி.ரி.) கற்கை நெறிக்காகமொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில்பதிவுசெய்யப்பட்டமாணவர்கள்உட்பட இணைந்த பல்கலைக்கழகக்கல்லூரி,சேர்ஜோன்கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவகம், நிலஅளவியல் பட வரைதல் நிறுவகம், கல்விக் கல்லூரிகள் ஆகிய ஏதாவது ஒன்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது கற்கை நெறியெதனையும் பின்பற்றுகின்ற மாணவர் ஒருவர் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய திப்புளோமா கற்கை நெறிகளைப் பின்பற்றுகின்ற அல்லது அரசாங்க புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு சென்ற மாணவர் ஒருவர் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றிற்கு அனுமதி பெறும் பொருட்டு விண்ணப்பிக்க தகுதியற்றவர். இத்தகைய மாணவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

4. இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் கற்கை நெறிகளாவன.

1. ஆங்கிலத்தில் திப்புளோமா / சான்றிதழ்.
2. கணக்கியலும் நிதியியலிலும் திப்புளோமா/ சான்றிசழ்.
3. உல்லாச பிரயாணத்துறை முகாமைத்துவத்தில் திப்புளோமா / சான்றிதழ்.
4. விடுதி முகாமைத்துவத்தில் திப்புளோமா/சான்றிதழ்.
5. முயற்சிகள், சிறு தொழில் முகாமைத்துவத்தில் திப்ளோமா / சான்றிதழ்.
6. விவசாயத்தில் திப்புளோமா / சான்றிதழ்.
7. மனையியல், ஊட்டவளத்தில் திப்புளோமா / சான்றிதழ்.
8. கணித விஞ்ஞானத்தில் திப்புளோமா / சான்றிதழ்.
9. (உயிரியல் விஞ்ஞானத்தை அல்லது பௌதிக விஞ்ஞானத்தை சிறப்பாகக் கொண்டு) விஞ்ஞானத்தில்

# ஸ்ரீதர் திரையரங்கில்... "தமிழோசை"

**தினசரி மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும்**

காண்பிக்கப்படுகிறது. சி-6149

## இல்ல விளையாட்டுப்போட்டி முடிவுகள்

நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த. க. பாடசாலையில் இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. கௌரவ விருந்தினராகப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பங்குபற்றினார். சிறிய பாடசாலையில் அமைந்த சிறிய மைதானத்தில் மிகவும் சிறப்பாகவும், திறமையாகவும் நடைபெற்ற அணி நடை, உடற் பயிற்சி மற்றும் விளையாட்டுக்கள் யாவும் சிறப்பாக அமைய அயராது பாடுபட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை மிகவும் பாராட்டினார். விநோத உடைப் போட்டி மிகவும் விநோதமாக இருந்தது யாழ். கோட்டத்தில் அமைந்த ஆரம்ப கல்விப் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். இல்லங்களுக்கிடையேயான போட்டிகளில் 1 ஆம் இடத்தை டெய்சி இல்லமும், 2 ஆம் இடத்தை றோஸ் இல்லமும், 3 ஆம் இடத்தை லில்லி இல்லமும் பெற்றுள்ளன. இவ் வருடத்திற்கான சிறந்த வீராங்கனையாக லில்லி இல்லத்தைச் சேர்ந்த க. துஷாயினியும், சிறந்த வீரனாக றோஸ் இல்லத்தைச் சேர்ந்த செ. பார்த்திபனும் முறையே வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர்.

யா/நல்லூர் சென் பெனடிக்ற்,
றோ. க. த. க பாடசாலை, உதவியாசிரியை.
நல்லூர். [4405]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

கலை, வர்த்தக வினா விடை

(DAY CLASS)

| | பாடங்கள் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|---|
| செவ்வாய், வியாழன் | பொருளியல் | திரு. கலாகரன் | 8-00—10-00 |
| | கணக்கியல் | திரு.S.K. பிரபாகரன் | 11-00—1-00 |
| | வர்த்தகம் | திரு.இரகுநாதன் | 1-00—2-00, 3-00-4-30 |
| | அளவையியல் | திரு.A.பிரபாகரன் | 10-00—11-00 |
| | இந்து நாகரிகம் | திரு.காரைசுந்தரம் பிள்ளை | 4-00—5-00 |
| சனி, ஞாயிறு | தமிழ் | திரு.குழந்தை | 7-00—8-00 |
| | புவியியல் | திரு.குணராசா | 8-00—9-00, 10-00—11-00 |
| | அரசியல் | திரு.ஜெயகாந்தன் | 8-00—9-00 |
| | வரலாறு | திரு.ஸ்ரீதரன் | 11-00—12-00, 2-00—3-00 |

(சி/6140)

## விக்னா கல்வி நிறுவனம்

14 | 06



## வீரவேங்கை 'ஜீவா'

கடற்புலி பொறியியல் பொறுப்பாளர்

ஜெயகுமார் நிர்மலகுமார்

(காஞ்சியப்பாவின் பேரன்)

திதி: 13. 03. 1993

உச்சிதனை முகந்து, உவகையால் மெய்ம் மறந்து
பெற்ற இன்பம் கோடியும்; இப்பிறவியில் இனியும்
வருமோ!
வச்சிரத்து மார் அழகும், வண்ண நிலா முக எழிலும்-
வந்து கூடிய நின்ற கோலம் வாழ்வில் இனி விழிகள்
காணுமோ!
எத்தகை மென் உறவும், ஏற்ற மிட்டிட வரும் தனமும்
உத்தம குமாரனே ஜீவா உனக்கு இணைதான்
ஆகுமோ!
நித்தமும் மலரும் உன் நினைவும், நீங்கிடா நெஞ்சத்து
சுமையும்
எத்தனை பிறவிகள் எடுப்பினும் எம் மனத்தினை
விட்டேதான் நீங்குமோ!

உன்னைப்பிரிந்து இன்று ஆண்டுகள் இரண்டு போனதே அன்றி நீயோ எம் இதயத்தில் என்றென்றும் குடியிருப்பாய்.

மயிலியதனை,
தொண்டமானாறு,
வல்வெட்டித்துறை.

மாவீரர் ஜீவா
பெற்றோர், குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(4403)

---

இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரிற்கு ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/ தபால் கட்டளையையும் 20 × 10 ச.மீ அளவுடைய சுயமுகவரிஇட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பமுடிவுத் தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விபரங்கள் தெளிவில்லாமல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
1993-03-03

[சி-6147]

---

7. [illegible] சான்றிதழ்.
8. கணித விஞ்ஞானத்தில் திப்புளோமா / சான்றிதழ்.
9. (உயிரியல் விஞ்ஞானத்தை அல்லது பௌதிக விஞ்ஞானத்தை சிறப்பாகக் கொண்டு) விஞ்ஞானத்தில் திப்புளோமா / சான்றிதழ்.
10. உல்லாசப் பிரயாணம் கலாசாரம் ஆகியவற்றில் திப்புளோமா / சான்றிதழ்.
11. உணவு விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஆகியவற்றில் திப்ளோமா / சான்றிதழ்கள்.

5. அனுமதிக்கான ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் இவ் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு பூரணப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் பிற விபரங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கான கோரிக்கைகள் யாவும் ''நிதிக் கட்டுப்பாட்டாளர்'' ப. மா ஆ. என்ற பெயரிற்கு எழுதப்பட்ட 35/- ரூபா பெறுமான காசுக் கட்டளையுடனும், சுய முகவரியிடப்பட்ட,முத்திரை ஒட்டப்படாத 9'' × 4'' அளவிற்குக் குறையாத கடிதஉறையுடனும் இணைக்கப்பட்டு ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் / அனுமதிகள் இற்கு அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பப் படிவங்களுக்கான கோரிக்கைகள்அடங்கிய ஒவ்வொரு கடிதமும் பின்வரும் விபரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. விண்ணப்பதாரியின் பெயர்:
2. விண்ணப்பதாரியின் முகவரி:
3. விண்ணப்பதாரி பெறவிரும்பும் விண்ணப்பங்களினதும், பிற விபரங்களினதும் மொழிமூலம்:
4. (அ) காசுக்கட்டளை இல.:
   (ஆ) திகதி:
   (இ) வழங்கப்பட்ட தபாற் கந்தோர்:
5. விண்ணப்பதாரியின் கையொப்பம்:

7. 1993.02.22 இருந்து 1993.03.17 வரை விண்ணப்பங்கள் தபால் மூலம் மட்டும் வழங்கப்படும் கடிதஉறையின் இடது பக்க மேல்மூலையில் ''இபக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

8. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபால் மூலம் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல.20, உவாட் இடம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு 1993 03.19 க்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் (''இபக களுக்கான அனுமதி'' என்றவாசகம் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்).

ஜனவரி 20ந் திகதி,
1993.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குழு.

[சி-6137]

---


விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

பொருளியல் — திரு. கலாகரன்

93
Sat - Sun 10 - 11 பாடத்திட்டம்
,, 12 - 1 பாடத்திட்டம்
,, 1 - 2 வினாவிடை

94
,, 11 - 12 பாடத்திட்டம்

(சி-6139)


---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-06

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு. தொலைத் தொடர்பு ஊழியரான தமிழ்ப் பொதுமகன்.

திருமலை - கன்னியா, மாங்காயூற்றுப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

வவுனியா - ஆலங்குளம், கன்னாட்டிப் பகுதியிற் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 3 தமிழர்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (யாழ். அச்சுவேலி, வளலாய்) சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

ஜீவா (காஞ்சியப்பா ஜெயக்குமார் நிர்மலகுமார் - மயிலியதனை, தொண்டமானாறு வல்வெட்டித்துறை - யாழ்.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கூலித்தொழிலாளியான, செங்கலடி -02 ஐச் சேர்ந்த தமிழிளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6144)

---


மீண்டும்

காலை - மாலை முட்டை அப்பம்,
பால் அப்பம் சுவைத்து மகிழ்ந்திட

யாழ். நவீன சந்தை
முன்பாக
புதிய சுவையுடன்
தரம் மிகு
கோழிப்
பிரியாணி

றிக்கோ

370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

(சி-6148)

சிந்தனைக்கு

நமக்கு வேண்டியது நம்புவதற்கான தடயம் அல்ல. உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான ஆர்வம்; இவை இரண்டும் நேருக்குநேர் மாறானவை.

— பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06- 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## ஐ. தே. க. பார்வையாளராக மாறிவிட முடியாது

தலைவர் பிரபாகரன் அண்மையில் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதோடு, சிங்கள, தமிழ் அரசியல் வட்டாரங்களிலும் பல உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறியமுடிகின்றது. இதனை வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இக்குழப்பத்திற்கும். பரபரப்பிற்கும் காரணம் தலைவர் பிரபாகரன் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ''தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்டசமஷ்டி அமைப்பு முறை முன்வைக்கப்பட்டால் அதைப் பரிசீலனை செய்ய நாம்தயார்'' எனக்கூறியதேயாகும். அதாவது இனப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப் புலிகள் ஒரு தன்னாட்சி அதிகாரங்கள் அமையப் பெற்ற ஒரு சமஷ்டி ஆட்சித் திட்டத்தைப் பரிசீலிக்கத் தயார் என்பதே அதுவாகும்.

அதாவது வழமை போலவே தலைவர் பிரபாகரன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தமது நிலைப்பாட்டைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியுள்ளார். இதில் சந்தேகத்திற்குரியதாகவோ அன்றி கேள்விக்குரியதாகவோ எதுவுமில்லை. இது குறித்து மேலதிக விளக்கங்கள் எவையும் எழுப்ப அவசியமுமில்லை.

இந்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசாங்கம் திட்டவட்டமாகத் தமது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். இதுவே அரசிற்குரிய தடுமாற்றமாகும், இனப்பிரச்சினையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒருபோதும் ஒரு பார்வையாளனாகவோ அன்றி மத்தியஸ்தனாகவோ இருக்க முடியாது. ஏனெனில் இப்பிரச்சினைக்கு அடிகோலியதில் இவர்களுக்கும் பெரும் பங்குண்டு. இதேபோன்று எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பங்குண்டு.

ஆனால், அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாகத் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பார்

## பொலிஸாரின் தரக்குறைவிற்கு
# இராணுவ மயமாக்கலே முக்கியமான காரணம்
## உள்ளக விசாரணையில் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலீஸ் படையை இராணுவ மயமாக்கியமை, போதிய அறிவின்மை, லஞ்சம் நல்லொழுக்கமின்மை ஆகியவையே பொலீஸாரின் தரக்குறைவுக்கான காரணங்கள் என்று பொலீஸ் படை குறித்த உள்ளக விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

பொலீஸ் மா அதிபர் ஏனஸ் பெரேராவின் பணிப்புரையின் பேரில், பொலீஸாரின் தரக்குறைவுக்கான காரணகாரியங்களை ஆராய்ந்த சிரேஷ்ட சுப்பிரின்டன் டொனால்ட் மெண்டிஸ் தனது அறிக்கையில் இவ்வாறு கூறியிருக்கிறார். கடந்த பத்து வருடக் காலப் பகுதியில் பொலீஸ் படையை இராணுவ மயமாக்கியதே பொலீஸாரின் தரக்குறைவான நடத்தைக்கான பிரதான காரணமாகும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

60,000 பேரைக் கொண்ட பொலீஸ் படை மனித உரிமைகள் மீறல், தன்னிச்சையான நடவடிக்கை, சட்ட விரோதச் செயல்கள், அரசியலில் தலையிடுதல் ஆகிய குற்றங்கள் சம்பந்தமான அண்மைக் காலங்களில் பத்திரிகைகள் மற்றும் சர்வதேச மனித நேய அமைப்புகளால் குறை கூறப்பட்டது தெரிந்ததே.

பொலீஸ் பொறுப்பதிகாரிகள் பலர் தமது திறமை காரணமாகப் பொலீஸ் படையில் கடமையாற்றாமல் வெளி ஆதரவுடன் பொலீஸ் படையில் இருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொலீஸ் படையில் நிலவும் ஒழுங்கீனம், பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பொலீஸாரை ஊழல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல், பொறுப்பதிகாரிகள் தமக்குக் கீழ் உள்ள பொலீஸாரை வழி நடத்தத் தகுதியின்மை ஆகியவையே பொலீஸ் படையில் நிலவும் கீழ்படிவின்மைக்குக் காரணமாகும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் ஊழல்களை அவர்களுக்குக் கீழ் உள்ள சார்ஜன்டுகளும், சாதாரண பொலீஸாரும் அம்பலப்படுத்தி விடுவார்கள் என்ற காரணத்தால் பொறுப்பதிகாரிகள் கீழ்ப்படிவற்ற பொலீஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

தொழிலாளர் மீதான தாக்குதல்

## விசாரணை செய்யுமாறு சர்வதேசஅமைப்புகோரிக்கை

[கொழும்பு]

ஆடைத் தொழிலாளர் மீது பொலீசார் மேற்கொண்ட தாக்குதல் மற்றும் 250க்கும் அதிகமான மின்கலத் தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலை நிர்வாகம் கதவடைப்பு செய்தமை குறித்தும் விசாரணை நடத்துமாறு தொழிலாளர் நிதியம் என்ற சர்வதேச அமைப்பு சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

இந்த அமைப்பின் நிறைவேற்றுச் செயலாளர் ஜே. ஹார்வே ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஒரு வருடத்துக்கு முன்பாக ஆடைத்தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர் பொலீசாரால் தாக்கப்பட்டதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள் என்றும், இரத்மலானை மின்கலத்தொழிற்சாலையில் 250க்கும் மேலான தொழிலாளர்களுக்கு நிர்வாகம் கதவடைப்புச் செய்தது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சம்பளக்குறைப்புக்கு எதிராகவும் மற்றும் கூடிய வசதிகள் கோரியும்இத்தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஆடைத் தொழிலாளர்களை அவர்களது சட்டத்தரணி பார்வையிட பொலீஸ் அனுமதி மறுத்ததாகவும் அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஒரு அதிகாரியை நியமித்து விசாரணை நடத்துமாறும் அந்த அமைப்புக் கோரியுள்ளது.

## மாணவர்கள் தாய்மொழியில் தேர்ச்சி பெற உதவும்

- பேராசிரியர் அ. சண்முகதாஸ்

மாணவர்கள் தம் தாய்மொழியில் ஆளுமை பெறவும், உறுப்பு எழுத்துக்களாக - அழகிய விதத்தில் எழுதிப் பழகுவதற்கும் இத்தகைய கையெழுத்துச் சஞ்சிகைகள் பெரிதும் துணை புரிகின்றன என்று பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்தார்.

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் அரங்கம் இரண்டாவது இதழின் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மாணவர்கள் அழகாகவும், உறுப்பு எழுத்தாகவும் எழுதும் வகையில் தமிழ்மொழியில் தமது தேர்ச்சியையும், ஆளுமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

செல்வன் லிங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் கல்லூரி அதிபர் ந. அனந்தராஜ், சாளரம் சஞ்சிகை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எம். இ. யோகேந்

## அரசு மனித உரிமைகளை தொடர்ந்து மீறுகிறது

கொழும்பு பல்கலைக்கழக ஆய்வு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அவசரகால சட்டத்தின் மூலம் தொடர்ந்து மனித உரிமைகளை மீறி வருகின்றது. என

எங்கும் தடுத்து வைத்திருக்க முடியாது என்றும் ஆனால் அவசரகால சட்டத்தின் கீழ் இவ்வாறு நீண்ட

## விளையாட்டு

[வடமராட்சி]

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (யோ)

★

[யாழ்ப்பாணம்]

யாழ். மத்திய கல்லூரிக்கும் யா/கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலத்திற்குமிடையில் 19 வயதுக்குட்பட்ட வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்றும் தொடர்ந்து கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறுகிறது.

இதுவரை விளையாடிய போட்டிகளில் இருகல்லூரிகளும் தோல்விகாணாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. [42]

★

வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப்போட்டிகள் அராலி இந்துக் கல்லூரியில் வட்டுக்கோட்டை கொத்தணி உபஅதிபர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் பின்வரும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

15 வயதுக்குக் கீழ் ஆண்கள்
1) அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் (2) அராலி கிழக்கு அ.மி. த. க. பாடசாலை

15 வயதுக்கு கீழ் பெண்கள்.
1) வட்டு இந்துக் கல்லூரி
2) அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்

17 வயதுக்கு கீழ் ஆண்கள்
1) அராலி இந்துக் கல்லூரி
2) அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்

17 வயதுக்கு கீழ் பெண்கள்
1) அராலி இந்துக் கல்லூரி

19 வயதுக்கு கீழ் பெண்கள்
1) அராலி இந்துக் கல்லூரி
2) வட்டு இந்துக் கல்லூரி
3) வட்டு திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் (42)

★

[சாவகச்சேரி]

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் சிறிதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

அண்மையில்மட்டுவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் சிறிதாஸ் கழகத்தை எதிர்த்து சென்நீக்கிளஸ் கழகம் மோதியது. இதில் 2:1 என்ற அடிப்படையில் சிறிதாஸ் கழகம் வெற்றி பெற்றது.

## எறிகணைத் தாக்குதல்

## கூட்டம்

(சுன்னாகம்)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அதிபர்கள் கழக வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமைகாலை9.00 மணிக்குமானிப்பாய்இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளது. (11)09)

(தென்மராட்சி)

எதிர்வரும் 8ஆம்திகதிநடைபெற இருக்கின்ற மகளிர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப்பகுதியில் உள்ள சிற்றூர்தி உரிமையாளர்களுக்கான கூட்டம் இன்று பி. பகல் 2மணிக்கு றிபேக் கல்லூரியில் நடைபெறும். (86)

### நுண்கலை மன்ற கருத்தரங்கு

குரும்பசிட்டி சன்மார்க்க நுண்கலை மன்றத்தினரின் மாதாந்தக் கருத்தரங்குத் தொடர் நாளை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை தலைமையில் இடம் பெறும். இக் கருத்தரங்கில் கலாகேசரி ஆ. தம்பித்துரை, கலாநிதி சோ. கிஷ்ண ராஜா, திரு. ச. துரைவீரசிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

### மகளிர் தின நிகழ்ச்சி

(பருத்தித்துறை)

யாழ். செஞ்சிலுவைச்சங்க பருத்தித்துறைப் பிரிவுத் தொண்டர்களின் சர்வதேசமகளிர்தினவிழா நாளைமறுதினம் பருத்தித்துறைபிரிவுச் செயலகத்தில்திரு. ச. சிவநாதன்தலைமையில் நடைபெறவுள்ளதுஇம் மகளிர்தினவிழாவிலேபருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (25)

## வருடாந்த உற்சவம்

(வடமராட்சி)

சக்கோட்டை புனித சவேரியர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன் தினம் ஆரம்பமாகிது (யோ)

### சின்னம் சூட்டும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முதல்வர் சின்னஞ் சூட்டும் விழாகடந்த புதன்கிழமை காலை 9மணிக்குகல்லூரிமண்டபத்தில்இடம் பெற்றது.

திருமதி தி.நாகராசாஅதிபர் (வண்ணைகொத்தணி அதிபர்) இவ் மாணவிகளுக்கு சின்னஞ் சூட்டி கௌரவித்தார்

விழா ஆரம்பிக்கு முன்யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி

நிலைப்பாட்டைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியுள்ளார். இதில் சந்தேகத்திற்குரியதாகவோ அன்றி கேள்விக்குரியதாகவோ எதுவுமில்லை. இது குறித்து மேலதிக விளக்கங்கள் எவையும் எழுப்ப அவசியமுமில்லை.

இந்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசாங்கம் திட்டவட்டமாகத் தமது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். இதுவே அரசிற்குரிய தடுமாற்றமாகும், இனப்பிரச்சினையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒருபோதும் ஒரு பார்வையாளனாகவோ அன்றி மத்தியஸ்தனாகவோ இருக்க முடியாது. ஏனெனில் இப்பிரச்சினைக்கு அடி கோலியதில் இவர்களுக்கும் பெரும் பங்குண்டு. இதேபோன்று எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பங்குண்டு.

ஆனால், அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாகத் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பார்வையாளராக மட்டுமே இருந்து வருகின்றது. ஆனால், தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு இன்றும் தொடர்ச்சியாகக் கோரியும் வருகின்றது.

இறுதியாக இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஏதாவது தீர்வுத் திட்டம் இருக்குமாயின் அதை முன்வைக்குமாறு தமிழக அரசிடமும் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கோரியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது அரசாங்கம் தீர்வுத் திட்டத்தைக் கோருவதில் அக்கறையாக இருக்கின்றதே ஒழிய, இனப்பிரச்சினையில் தனது பங்கை ஆற்ற முன்வரவில்லை.

ஆனால், அரசு இதற்குச் சாக்குப்போக்குச் சொல்லப் பார்க்கிறது. தனது பொறுப்பிலிருந்து விடுபட்டு விடுதலைப் புலிகள் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைப்பதானால் அதனைப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் முன்வைக்கட்டும் எனக் கூறும் அதேவேளை, "எதிர்க் கட்சியினரின் விவாதத்திற்கான அழைப்பிற்கு தெரிவுக்குழு தீர்வுத் திட்டம் ஒன்றை பரிசீலிக்கும்போது அது குறித்து விவாதிப்பதற்கு முடியாது எனவும் காரணம் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றது.

விடுதலைப் புலிகள் தமது தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்காமல் இருக்கலாம். ஆனால் பகிரங்கமாக உலகளாவிய ரீதியில் தமது நிலைப்பாட்டை உலகிற்கு வெளிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கமும் உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பின் தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும். அவ்வாறு இல்லாமல் அரசாங்கம் பார்வையாளராக மட்டுமே இருக்க விரும்பின் தெரிவுக்குழு உறுப்பினர்களாக இருக்காமல் தனியாக பார்வையாளர்களாக மட்டும் இருப்பதே நியாயமாகும். ஏனெனில் தெரிவுக்குழு ஒரு முடிவிற்கு வர அது சில வேளை உதவலாம்.

இல்லாவிடில் ''நாம் 'எல்லாம்' தர விரும்புகிறோம். ஆனால் ஈழத்தை அல்ல. 'எல்லாம்' தந்தால் ஈழத்திற்கு இடமில்லை. அந்தப் பிரச்சினையே தலையெடுக்காது'' எனக் கூறும் ஜனாதிபதி பிரேமதாசா மனப்பூர்வமாகவே அதைக் கூறியிருப்பாரேயானால் ஈழம் தவிர்ந்த தமிழரின் ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வரவேண்டும்.

---

சாலையைச் சேர்ந்த தொழிலாளர் பொலிசாரால் தாக்கப்பட்டதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள் என்றும், இரத்மலானை மின்கலத்தொழிற்சாலையில் 250க்கும் மேலான தொழிலாளர்களுக்கு நிர்வாகம் கதவடைப்புச் செய்தது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சம்பளக்குறைப்புக்கு எதிராகவும் மற்றும் கூடிய வசதிகள்

---

## …பெற உதவும்

**- பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

மாணவர்கள் தம் தாய் மொழியில் ஆளுமை பெறவும், உறுப்பு எழுத்துக்களாக - அழகிய விதத்தில் எழுதிப் பழகுவதற்கும் இத்தகைய கையெழுத்துச் சஞ்சிகைகள் பெரிதும் துணை புரிகின்றன என்று பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்தார்.

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் அரங்கம் இரண்டாவது இதழின் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மாணவர்கள் அழகாகவும், உறுப்பு எழுத்தாகவும் எழுதும் வகையில் தமிழ்மொழியில் தமது தேர்ச்சியையும், ஆளுமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

செல்வன் லிங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் கல்லூரி அதிபர் ந. அனந்தராஜ், சாளரம் சஞ்சிகை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எம். இ. யோகேந்திரம், பண்டிதர் முத்துவேலு, நீலகண்டன், இளையவன் உட்படப் பலர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

---

3) வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் (42)

★

[சாவகச்சேரி]

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற உதைப் பந்தாட்டப் போட்டியில் சிறிதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

அண்மையில்மட்டுவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் சிறிதாஸ் கழகத்தை எதிர்த்து சென்நீக்கிளஸ் கழகம் மோதியது. இதில் 2:1 என்ற அடிப்படையில் சிறிதாஸ் கழகம் வெற்றி பெற்றது.

---

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (25)

---

# அரசு மனித உரிமைகளை தொடர்ந்து மீறுகிறது

## கொழும்பு பல்கலைக்கழக ஆய்வு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அவசரகால சட்டத்தின் மூலம் தொடர்ந்து மனித உரிமைகளை மீறி வருகின்றது. என கொழும்பு பல்கலைக்கழகம் மனித உரிமை மீறல் தொடர்பான ஆய்வில் தெரிவித்துள்ளது.

சாதாரண சட்டத்தின் கீழ் தொடர்ந்து ஒரு நபரை குறிப்பிட்ட நேரத்திற்கு மேலாக எங்கும் தடுத்து வைத்திருக்க முடியாது என்றும் ஆனால் அவசரகால சட்டத்தின் கீழ் இவ்வாறு நீண்ட நாட்களுக்கு வைத்திருக்க முடியும் என்றும் இதுவே மனித உரிமையை மீறும் அடிப்படை என்று அந்த அமைப்பு தெரிவிக்கின்றது.

---

## 10 கிலோ கிராம் தங்கம் மீட்பு

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் உள்ள வெளிநாட்டு வங்கிக் கிளை ஒன்றில் வெளிநாட்டு செலாவணிகரும பீடத்தில் இலங்கை வாசி ஒருவர் 70 தங்க பிஸ்கட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மேற்படி வங்கிக் கிளை அலுவலகத்திற்கு சுங்கப்பகுதியினர் சீல் வைத்துள்ளனர். இத்தங்க பிஸ்கட்டுகள் 51 இலட்சம் ரூபா பெறுமதியானதும் 10 கிலோகிராம் எடையுடையதும் என தெரியவருகின்றது.

---

# கொழும்பில் கத்திமுனையில் வர்த்தகரிடம் பணம் பறிப்பு

[கொழும்பு]

வியாபார நோக்குடன் கொழும்பு சென்ற முன்னாள் பிரபல வர்த்தகர் ஒருவரை கத்தி முனையில் வழிமறித்து இனந் தெரியாத மூவர், அவரிடமிருந்து 19, 600 ரூபாவை பறித்துச் சென்றனர்.

இச் சம்பவம் அண்மையில் கொழும்பில் புதிய சோனக தெருவில் நடைபெற்றது. பணத்தைப் பறிகொடுத்தவர், புலோலி கிழக்கில் வசிக்கும், ''ராஜா கோப்பறேசன்'' முன்னாள் பங்காளர் திரு. சி. நடராஜா என்பவரே.

பணத்தைப் பறிகொடுத்துவிட்டு, நிர்க்கதிக்காளாகிய இவர், அங்குள்ள சில உறவினர்கள் உதவி மூலம், இங்கு வந்துசேர்ந்துள்ளார். (30)

---

# எறிகணைத் தாக்குதல்

[சுன்னாகம்]

வலி. வடக்கு சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண்களிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி இரவுவேளைகளில் எறிகணைத் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

கட்டுவன், கும்பிளான் காவலரண்களிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கும், நள்ளிரவு 12 மணிக்கும் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (9, 11)

---

# வருடாந்த உற்சவம்

(வடமராட்சி)

சக்கோட்டை புனித சவேரியர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன் தினம் ஆரம்பமாகிது (யோ)

## சின்னம் சூட்டும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முதல்வர் சின்னஞ் சூட்டும் விழாகடந்த புதன்கிழமை காலை 9மணிக்குகல்லூரிமண்டபத்தில்இடம் பெற்றது.

திருமதி தி.நாகராசாஅதிபர் (வண்ணைகொத்தணி அதிபர்) இவ் மாணவிகளுக்கு சின்னஞ் சூட்டி கௌரவித்தார்

விழா ஆரம்பிக்கு முன்யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் மிகவும் சிறப்பாக பாண்ட் வாத்தியங்களுடன் கல்லூரி மண்டபத்திற்குள் சென்றனர். (42)

---

## சேவை விஸ்தரிப்பு

[யாழ்ப்பாணம்]

வேலணை பிரதேசசபையின் ஆயுர்வேத வைத்திய சேவையையும் நூலக சேவையையும் கெற்பலி பண்டிதர் குடியிருப்பு முகாம் வரை விஸ்தரிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக வேலணை பிரதேசசபை விசேட ஆணையாளரின் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. இவ்விரு சேவைகளையும் மேற்கொள்வதற்கான போக்குவரத்து வசதிகள் புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திடம் கோரப்பட்டுள்ளது. 22

---

# தென் ஆசிய பயணிகளுக்கு ஒழுங்குவிதியில் தளர்வு

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து மலேசியாவிற்கு வருகைதரும் பயணிகள் தொடர்பான ஒழுங்கு விதிகளை மலேசியா அரசு தளர்த்தியுள்ளதாக தெரியவருகின்றது.

---

கொழும்பில் தங்கி இருப்போர்க்கு

# நிவாரணம் தொடர்ந்தும் வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் வடபகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் பலபாகங்களிலும் தங்கியுள்ள அகதிகளுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்கும்படி அமைச்சர் செல்லச்சாமி கோரிக்கைவிடுத்துள்ளார்.

மேற்படி பகுதிகளில்இருந்து இடம் பெயர்ந்தவர்கள் கொழும்பில் இந்து ஆலயங்களிலும் இந்து கலாசாரமண்டபங்களிலும் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும்தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு தொடர்ந்து உணவுப் பொருள்களை வழங்கவேண்டுமென்று கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

# மாணவி குத்திக் கொலை; குத்தியவர் தற்கொலை

[வவுனியா]

பாடசாலை மாணவி ஒருவர் வீதியில் வைத்து கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம்பற்றித்தெரியவருவதாவது: நேற்றுமுன்தினம்காலை8 மணியளவில்திருச் செல்வி தனஞ்சயன்(வயது 17) என்ற மாணவி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது புளியங்குளம் எனுமிடத்தில் வைத்து இளைஞர் ஒருவரால் கத்தியால் குத்தப்பட்டார். கத்திக் குத்துக்கு இலக்கான மாணவிஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

இவர் மரணமடைந்ததை அறிந்த கொலையாளியான மயில்வாகனம் கருணாகரன் (வயது 22) என்பவர் தானும் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இக்கொலைக்கு காதல் விவகாரமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

# கப்டன் வேந்தனுக்கு அஞ்சலி

[கொடிகாமம்]

கிளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மிடையில் கடந்த செவ்வாய் இரவு நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த கப்டன் வேந்தன் (ஐயம்பெருமாள் சத்தியசீலன் -புத்தளம்) என்பவரது புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக கடந்த புதன்கிழமை கொடிகாமம் பொதுச்சந்தையில் வைக்கப்பட்டிருந்தது.

வேந்தனின் புகழுடலுக்கு பெருமளவு மக்கள் மலர்தூவி கண்ணீரஞ்சலி செலுத்தினர். இறுதியில் கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு.விமல் தலைமையில்அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. இதில் வடமராட்சி கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன், சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. சங்கர் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

வேங்கையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதுடன் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. [86]

---

# இலவச நூலகம் திறப்பு

(பருத்தித்துறை)

புலோலிப்பகுதி மக்களின் நன்மைகருதி''புலோலி பொது மக்கள் இலவசநூல்நிலையம்'' அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. புலோலி முதலியார் மண்டபத்தில் நடைபெற்ற இந்நூலகத் திறப்பு விழாவிற்கு திரு. ச. சோமசுந்தரம் தலைமை தாங்கினார். இளைப்பாறிய உதவி விவசாயப்பணிப்பாளர் திரு. பொன். மாணிக்கவாசகர் மங்களவிளக்கேற்றி நூல்நிலையத்தைத் திறந்து வைத்தார். மாவட்ட நீதிபதி திரு. ந. இராமச்சந்திரன். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. சி. பொ. பாலசிங்கம், புலோலி ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் திரு. மு. இராமச்சந்திரன் உட்பட இன்னும் பலர் இவ்விழாவிலே கலந்து கொண்டனர். இளைப்பாறிய அதிபர்திரு.எட்வேட்யோசுவா நன்றியுரை கூறினார். (25)

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்



# ஈழநாதம்

# இந்தியாவில் நிம்மதியாக தமிழர் வாழமுடியா நிலை

## கருணாநிதி கவலை

[கொழும்பு]

''பாபர்மசூதிப் பிரச்சினைக்குப் பிறகு இந்தியாவில் தமிழர்கள் எங்கும் நிம்மதியாக வாழ முடியவில்லை. பம்பாயில் தமிழன் கொல்லப்படுகிறான் உடைமைகளை இழந்து வருகிறான் இந்தியா ஒருமைப்பாடு நிறைந்த நாடு என்று சொல்கிறோம். தமிழகத்தில் பிற மாநில மக்கள் வாழமுடிகிறது. ஆனால் மராட்டியத்திலும், கர்நாடகத்திலும் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை.'' இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர்தொடர்ந்துகூறுகையில் இவ்வாறான நிலமையில் எங்கே இருக்கிறது ஒருமைப்பாடு தமிழ்நாடு இந்தியாவில் தான் உள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மகளிர் தின நிகழ்ச்சி

சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சிகள் இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ் கிளைத் தலைமையகத்தில் திங்கள் பி. ப. 3 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்ச்சியில் தலைவராக திரு. சி. வேலாயுதம் (உதவிக்கல்விப் பணிப்பாளர்), பிரதம விருந்தினராக திருமதி சோ. சண்முகலிங்கம் ஆகியோர் முதன்மை வகிப்பர். மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (05)

## அன்பில் தர்மலிங்கம் நேற்று காலமானார்

(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. அன்பில் தர்மலிங்கம் தனது 73-வது வயதில் நேற்று திருச்சியில் காலமானார். இவர் கடந்த சில நாட்களாக உடல்நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் பா ஜனதாவின்

## ஊர்வலத்துக்கு மத்திய அரசு தடைவிதிக்க வேண்டும்

சென்னையில் பாரதீய ஜனதாக்கட்சி நடாத்த உத்தேசித்துள்ள பேரணிக்கு தடைவிதிக்க மாநில அரசுக்குஉத்தரவிடவேண்டும்என ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி இந்திய பிரதமர் நரசிம்மராவை கேட்டுள்ளார்.

சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர் இது தொடர்பாக நரசிம்மராவிற்கு கடிதம் எழுதவுள்ளதாக தெரிவித்தார். இப்பேரணி பெருமளவிற்கு சட்ட ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதால் இதனைத் தடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ. நா

அகதிகளுக்கான ஐ. நா உயர் ஸ்தானிகராலய அதிகாரி அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திய பின்னர், மீண்டும் யாழ். வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபருடன் மட்டும் இயங்கும் பாடசாலை

புங்குடுதீவில் இருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இயங்கி வரும் யாழ். புங்குடுதீவு இறுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிபர் மட்டுமே தற்போது இருப்பதாகவும் ஏனைய இப்பாடசாலை ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சிக்காகச் சென்றுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்குரிய இடத்துக்கு புதிய ஆசிரியர்கள் இதுவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அறியப்படுகிறது. (17)

## இலட்ச அருச்சனை

ஆனைக்கோட்டை, வண்-வடமேற்கு அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை, ஹோமப் பெருவிழா பூர்த்தி நாளை மாசிமக தினத்தன்று இடம் பெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு நவோத்திரசத சங்காபிசேகமும் 9.00 மணிக்கு விசேடபூசை இலஷநாம அர்ச்சனை பூர்த்தி, வீதிஉலா என்பன இடம் பெறவுள்ளன.

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

படம் வரைபயிலுனர் பயிற்சி நெறி இறுதிப்பரீட்சை எதிர் வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை நடைபெறவுள்ளதாக இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது. இப் பரீட்சைக்கான நேரசூசிகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் நாளை ஞாயிறு காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழீழக் கல்விக்கழகப் பணிமனையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் பேரவை உறுப்பினர் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு இதன் செயலாளர் கேட்டுள்ளார்.

## குமணவில் சைக்கிள்

[வடமராட்சி]

யாழ். மாவட்ட கிராம உத்தியோகஸ்தர்களுக்கென 100 துவிச்சக்கர வண்டிகள் குமண கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன. (யோ)

## நாடக விழா

(குருநகர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குருநகர் புனித யாகப்பர் மகளிர் ஒன்றியம் இன்று சனிக்கிழமை மாலை 6.30மணிக்கு யாழ்- பிரதான வீதி திருமறைக்கலாமன்ற அரங்கில் நாடக விழாவொன்றை நடத்துகிறது

''இலங்கேஸ்வரன்'' (வடமோடி நாட்டுக் கூத்து) ''களம் கண்ட காரிகை'' (விடுதலை வீராங்கனை புனிதை யோன் ஒவ் ஆர்க்சரிதை) ஆகிய இரு இலக்கிய நாடகங்கள் விழாவில் மேடைஏற இருக்கின்றன. (21)

## 5சைக்கிள்கள் திருட்டு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற பாடசாலை மெய்வல்லுநர் போட்டியின் போது, அங்கு பாதுகாப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐந்து, (மகளிர்) துவிச்சக்கர வண்டி இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளது.

சுமார், 32 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க இச் சைக்கிள்களின்களவு பற்றி, பருத்தித்துறை காவல்துறையில் புகாரிடப்பட்டுள்ளது. (30)

ஆசிரியர்

துள்ளனர்.

அம்மகஜரில் வேலணைக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளரின் இவ் இடமாற்ற உத்தரவு குறித்து பலத்தஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது

வன்னி

இடம் பெற்றதாகக் தெரிவிக்கப்பட்டது.

இக் குண்டு வீச்சு நிகழ்வில் எவரும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது ( தி

புலமைப்

இப்பெறுபேறிற்கும் வெட்டுப் புள்ளி அறிவிக்கப்பட்டாலே பெறுபேறுகளை மிகவிரைவில் பாடசாலைகளுக்கு விநியோகிக்க முடியுமென யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (பா)

அனைத்துலக

நாளை (07-03-1993) ஞாயிற்றுக்கிழமை
இரவு 7-00 மணிக்கு

புத்தூர்-ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில்

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்
எஸ். ஜீ. சாந்தன்
அரிச்சந்திரனாகவும்

அரியாலையூர்
வீ. செல்வம்
சந்திரமதியாகவும்

இணைந்து வழங்கும்

'அரிச்சந்திரா மயானகாண்டம்'

காங்கேசன்துறை
நடேஸ்வரக் கல்லூரியின்
கல்வி அபிவிருத்தி நிதிக்காக
நடைபெறுகிறது.

கல்லூரி அபிவிருத்திச் சபை

(சி-6152)

## பிறந்த நாள் வாழ்த்து



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வழங்கும்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஏ. தியாகராஜா

இடம்பெறும். (05)

## பிறந்த நாள் வாழ்த்து



### மயூரன்

(யாழ்ப்பாணம்)

சுஜன் மோட்டோஸ் உரிமையாளரான சுதுமலையைச் சேர்ந்த கஜேந்திரவரதன் ஈஸ்வரி தம்பதிகளின் தவப் புதல்வன் மயூரன் தனது முதலாவது பிறந்த நாளை 6. 3 93 இன்று சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரைஅப்பா, அம்மா அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமா, பெரிய மாமா குடும்பத்தினர், சிவா மாமா குடும்பத்தினர், சபாநாதன் மாமா குடும்பத்தினர், ஜேர்மன் ராசன் சித்தப்பா குடும்பத்தினர், நோர்வே ரவி சித்தப்பா குடும்பத்தினர், கனடா மோகன்சித்தப்பா குடும்பத்தினர், ஜேர்மன் சசி மச்சாள் குடும்பத்தினர், சாந்திச் சித்தி ஆகியோர் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தி. கஜேந்திரவரதன்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(4402)

யாழ். பொறியியல் இணையம்

Jaffna Engineering Assciation

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ். பிரதேசத்தில் பொறியியல் தொழில் நுட்பத்துறையில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், நகர திட்டமிடலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், நில அளவையாளர்கள், கணிய அளவையாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்துப் பொறியியல் தொழில் நுட்பத்தையும்பிரயோகத்தையும் அபிவிருத்தி செய்யும் நோக்கோடு மேற்படி இணையம் ஆரம்பிக்கப்படுகின்றது

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் 20. 03. 93 சனிக்கிழமை காலை 9. 00 மணிக்கு ஆரம்பமாகும் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டோர் யாவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(4406) - அமைப்புக்குழு

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர் இது தொடர்பாக நரசிம்மராவிற்கு கடிதம் எழுதவுள்ளதாக தெரிவித்தார். இப்பேரணி பெருமளவிற்கு சட்ட ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதால் இதனைத் தடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஐ. நா

அகதிகளுக்கான ஐ. நா உயர் ஸ்தானிகராலய அதிகாரி அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திய பின்னர், மீண்டும் யாழ். வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மனையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் பேரவை உறுப்பினர் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு இதன் செயலாளர் கேட்டுள்ளார்.

## குமணவில் சைக்கிள்

[வடமராட்சி]

யாழ். மாவட்ட கிராம உத்தியோகஸ்தர்களுக்கென 100 துவிச்சக்கர வண்டிகள் குமண கப்பலில் எடுத்துவரப் பட்டுள்ளன. (யோ)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வழங்கும்

## முழுநிலா நாள் அறிவியலரங்கு

காலம்: 07-03-1993 ஞாயிறு பிற்பகல் 3-30 மணி.

இடம்: குமாரசுவாமி மண்டபம்.

3-30 — 4-00 மணி வரை

விடையம்:

### 'உலகின் சமகால செய்தித் தொகுப்பு'

திரு. ச. சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

4-00 — 5-00 மணி வரை

### 'பண்டைய ஈழம்'

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
தலைவர், வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

பழைய மாணவர் சங்கம்,
யா. இ. க.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

(சி-6151)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 05-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8514

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

42-2157, 42-9326, 28-2511, 41-9167, 28-7261, 26-2414, 24-6348, 28-1862, 42-3924, 28-6996, 27-2020, 27-0849, 27-9649.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-1706, 40-2394, 26-4393, 27-7952, 41-9038, 26-0032, 28-1414, 26-1495, 26-5560, 24-4747.

துள்ளனர்.

அம்மகஜரில் வேலணைக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளரின் இவ் இடமாற்ற உத்தரவு குறித்து பலத்தஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது

### வன்னி

இடம் பெற்றதாகக் தெரிவிக்கப்பட்டது.

இக் குண்டு வீச்சு நிகழ்வில் எவரும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது ( தி

### புலமைப்

இப்பெறுபேறிற்கும் வெட்டுப் புள்ளி அறிவிக்கப்பட்டாலே பெறுபேறுகளை மிகவிரைவில் பாடசாலைகளுக்கு விநியோகிக்க முடியுமென யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (பா)

### அனைத்துலக

திருக்குடும்பக் கன்னியர்மடம்

ஃ இரண்டாம் இடம்:- கெளரி, கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்.

ஃ மூன்றாம் இடம்:- செந்தில் குமரன்- சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

ஃ பாராட்டுக்குரியவர்கள்:- தர்சினி சிவலிங்கம்- அரசடி வீதி, நல்லூர். றஜனி பத்மநாதன்- பிரம்படிலேன், கொக்குவில்.

மத்திய பிரிவு:-

ஃ முதலாம் இடம்:- நா. ரூபன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ஃ இரண்டாம் இடம்:- மதன் குமார்- யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.

ஃ மூன்றாம்இடம்:- பூவிழி.

மேற்பிரிவு:-

ஃ முதலாம் இடம்:- செல்வி சி. நர்மதா- மண்டைதீவு மகா வித்தியாலயம்.

ஃ இரண்டாம் இடம்:- மு. ஜக்குலின் ஊர்காவற்றுறைக் கொத்தணி.


ஃ மூன்றாம்இடம்:- திருமதி த. இராசலிங்கம், வேலணைக் கோட்டம்.

ஃ பாராட்டுக்குரியவர்கள்:- ராதாகிருஷ்ணன்- இருபாலை

### ராஜீவ்

இதேவேளை இக்கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சண்முக வடிவேலு, பெங்களூர் தொழிலதிபர் ரங்கநாத் ஆகியோர் பிணையில் விடுதலை செய்ய கோரி தாக்கல் செய்திருந்த மனுவை நீதிபதி சித்திக் தள்ளுபடி செய்தார்.

சண்முகவடிவேல் புலிகளிடமிருந்து வந்த தங்கத்தைப் பணமாக்கி புலிகளுக்கு நிதி வழங்குபவராக இருந்தாரென்றும் பெங்களூர் தொழிலதிபர் ரங்கநாத் சிவராசன், சுபாஉட்பட புலிகள் உறுப்பினர்களை மறைத்து வைத்திருந்தார் எனவும் குற்றம் சட்டப்பட்டுள்ளனர்.



## அமரர் ஏ. தியாகராஜா

(சுமதி பொற்தொழிற்சாலை உரிமையாளர்)

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 12-01-1932 | 29-02.1988 |

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை
பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

''கலைஅரசி''
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

[3384]

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா பொன்னுத்துரை

கோண்டாவில் மேற்கை சேர்ந்த திருமதி அன்னம்மா பொன்னுத்துரை காலமானார். இவர் காலம் சென்ற திரு. எஸ். பொன்னுத்துரையின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும், திரு.பொ. நாரராயணலிங்கம் (இளைப்பாறிய P. W. D. ஓவசியர், யாழ். கண்ணாடி நிலையம், எக்ஸ்போ பேணிச்சர்ஸ்), திரு நவசுந்தரலிங்கம்(மலாயா) திருமதி மகாயோகேஸ்வரி சிவஞானம் (பரணி பார்மஸி), திருமதி பரமேஸ்வரிசதாசிவம் (Rte. Post Master), திருமதி இராஜேஸ்வரி கனகரட்ணம் (இளைப்பாறிய விவசாய இலாகா கணக்காய்வாளர்), திரு. உருத்திரசிங்கம் (லண்டன்), திரு.சோமசூரியசிங்கம் (சிங்கம்ஸ்பார்மஸி), காலம் சென்ற திருமதி மங்கயற்கரசி பரமேஸ்வரன், திரு. சுந்தரானந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற திரு. சண்முகம்பிள்ளை, திருமதி மகேஸ்வரி ராஜதுரையின் அன்ரி அம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ''சிங்கம்ஸ் இல்லம்'' ஸ்ரேசன் வீதி கோண்டாவில் மேற்கு இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக தாவடி மயானத்துக்கு இன்று 6-3-93 சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பொ. சோமசூரியசிங்கம்
(சிங்கம்ஸ் பார்மஸி)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(சி-4407)